# நுவரெலியா மாவட்டத் தனியார் பாடசாலைகளில் ஆங்கில மொழிக் கற்றல் ஊடகத் தெரிவால் தாய்மொழிக் கற்றல் கற்பித்தலில் ஏற்படும் சிக்கல்கள்

**லிந்துஜா, செ., செந்தூரன், சி**
மொழியியல் மற்றும் ஆங்கிலத் துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
stlindu@gmail.com

*மொழி மனித சமுதாயத்தின் இன்றியமையாத ஆக்கக்கூறு. மொழி ஒருவரின் சிந்தனைகளையும் கருத்துக்களையும் மற்றொருவருக்கு தெரிவிக்கும் மிகச் சிறந்த ஊடகமாகும். பல்லின சமூகமாக மட்டுமன்றி பன்மொழியச் சமூகத்தைக் கொண்ட இலங்கையில் சிங்கள இனம் பெரும்பான்மை இனமாகவும் தமிழர்கள், முஸ்லிம்கள், வேடர்கள், பேகர்கள், காப்பிலியர்கள் போன்றோர் சிறுபான்மை இனமாகவும் குறிப்பிடப்படுகின்றன. இங்கையில் அரச கரும மொழிகளாக சிங்களம், தமிழ் ஆகிய மொழிகளும் சர்வதேச இணைப்பு மொழியாக ஆங்கில மொழியும் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. இதன் அடிப்படையில் இருமொழிய பிரதேசமாக காணப்பட்டாலும் மும்மொழி பேசும் மக்கள் கூட்டத்தினரைக் கொண்ட பிரதேசமாகவும் தமிழ் மக்கள் அதிகம் செறிந்து வாழக்கூடிய சமுதாயமாகவும் நுவரெலியா மாவட்டம் காணப்படுகின்றது. ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் உருவான தனியார் பாடசாலைகளின் செல்வாக்கு இன்றும் நுவரெலியா மாவட்டத்தில் காணப்படக் கூடியதாக உள்ளது. பெற்றோரின் விருப்பின் அடிப்படையிலும் பல்வேறு காரணங்களின் அடிப்படையிலும் அநேகமான தமிழ்மொழி மாணவர்கள் தனியார் பாடசாலைகளில் கல்விக் கற்று வருகின்றனர். அந்த வகையில் தனியார் பாடசாலைகளில் ஆங்கில மொழியை பயிற்று மொழியாகக் கொண்டு தமிழ்மொழிப் பாடம் தவிர்ந்த ஏனைய அனைத்துப் பாடங்களும் கற்றல் கற்பித்தல் செயன்முறையின் கீழ் ஆங்கில மொழி மூலம் இடம் பெறுவதால் தமிழ்மொழி மாணவர்கள் தாய்மொழிக் கற்றல் கற்பித்தலில் பல்வேறான சிக்கல்களை எதிர்க்கொள்கின்றனர். தமிழ்மொழிப் பாடம் தாய்மொழியில் கற்பிக்கப் பட்டாலும் மாணவர்களின் பின்னணியை அல்லது சுற்றுச் சூழல் தாக்கத்தை அடிப்படை யாகக் கொண்டு அதிகமானோர் வீட்டுச் சூழலில் ஆங்கில மொழியைத் தொடர்பாடல் மொழியாகக் கொண்டிருப்பதால் தாய்மொழிக் கற்றல் கற்பித்தலில் ஆங்கில மொழியின் தாக்கம் காணப்படுவதை அவதானிக்க முடிகின்றது. குறிப்பாக ஆசிரியர்களின் கற்பித்தல் செயற்பாடுகளின் போது ஆங்கில மொழிச் சொற்பதங்களையே தாய்மொழிக் கற்பித்தலிலும் பிரயோகிப்பதை அவதானிக்கக் கூடியதாக உள்ளது. இதனடிப்படையில் நுவரெலியா மாவட்ட நகரப் பகுதியில் அமைந்திருக்கும் தனியார் பாடசாலைகளில் கல்வியைத் தொடரும் தமிழ்மொழி மாணவர்களது தாய்மொழிக் கற்றல் கற்பித்தலில் ஏற்படும் சிக்கல்களை இனங்கண்டு அவற்றுக்கான தீர்வுகளை முன்வைப்பதே இவ்வாய்வின் நோக்கமாகும். ஆய்வுப் பிரதேசத்தில் இவ்வாறானதோர் ஆய்வு இடம்பெறவில்லை என்ற அடிப்படையில் ஆய்வு இடைவெளியை குறைநிரப்புவதில் இவ்வாய்வு முக்கியத்துவம் பெறுகின்றது. இவ்வாய்வானது முதலாம், இரண்டாம் தரவு மூலாதாரங்களினைப் பயன் படுத்தி பிரயோக மொழியியல் ஆய்வு முறையியலை அடிப்படையாகக் கொண்டு விவரண*

*ஆய்வு முறையினூடாக மேற்கொள்ளப்பட்டுள்ளது. முதல் நிலைத்தரவுகள் வினாக்கொத்து, அவதானம், கலந்துரையாடல், மூலமும் இரண்டாம் நிலைத்தரவுகள் ஆய்வுக்கட்டுரைகள், சஞ்சிகைகள், இணையத்தளம் மூலமும் பெறப்பட்டுள்ளன. இவ்வாய்வின் மூலம் தமிழ்மொழி மாணவர்கள் தாய்மொழிக் கற்றலில் ஆர்வமின்மை, எழுதுதல் மற்றும் வாசித்தல் போன்றவற்றில் சிக்கல்கள், விளங்கிக் கொள்வதில் சிக்கல்கள் என்பன மொழியியல் ரீதியாக வகைப்படுத்தப்பட்டு ஆராயப்பட்டுள்ளதுடன் ஆசிரியர்களது கற்பித்தல் முறைகளில் உள்ள குறைப்பாடுகள் என்பன அடையாளப்படுத்தப்பட்டு அவற்றுக்கான காரணங்களும் பரிந்துரைகளும் முன்மொழியப்பட்டுள்ளன.*

**திறவுச்சொற்கள்:** மொழிக் குறுக்கீடு, தாய்மொழி, இருமொழியம், இரண்டாம் மொழி